யானை வரும் பின்னே
மணி ஓசை வரும் முன்னே!

# வஹ்ஹாபிஸ வழிகேடு நம் நாட்டுக்கு சாபக்கேடு!

முதற்பதிப்பு : 07.03.1997

இரண்டாம் பதிப்பு : சிறு மாற்றங்களுடன் 01.01.2020

தொகுப்பு :

**மௌலவீ, அல்ஹாஜ், அஷ்ஷெய்க்**
**A. அப்துர் றஊப் மிஸ்பாஹீ, பஹ்ஜீ**

வெளியீடு:
அகில இலங்கை ஸூபிஸ ஜம்இய்யதுல் உலமா
BJM. வீதி, காத்தான்குடி – 06.
கை பேசி: 0777 733 786

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பிற்குரிய இலங்கை வாழ் அனைத்து இன, மத, மொழி மக்களுக்கும் எனது நல்லாசிகள்!**

"வஹ்ஹாபிஸம்" என்ற கொடிய காட்டுப்புலி முஸ்லிம்களுக்கும், இஸ்லாம் மார்க்கத்திற்கும் மட்டும் நஞ்சானதல்ல. அது இந்நாட்டிற்கும், இந்நாட்டில் வாழும் அனைத்து மத, இன, மொழி மக்களுக்கும் நஞ்சானதும், எதிரானதுமேயாகும். இப்புலியின் வயிற்றுள் இருப்பது உயிர் கொல்லும் குண்டுகளேயன்றி குடலும், அதன் உறுப்புக்களும் அல்ல. இதற்கு மறுக்க முடியாத ஆதாரம் ஏப்ரல் 21 (2019) தாக்குதலேயாகும்.

இப்புலியின் கொடூரக் குணம் பற்றியும், கொள்கை, இலட்சியம் பற்றியும் 1970ம் ஆண்டு தொடக்கம் - எனது 25 வயதிலிருந்தே - மக்கள் மத்தியில் கூறி அவர்களை எச்சரித்து வருகிறேன்.

அக்கால கட்டத்தில் இப்புலிக்கு எதிராக பகிரங்கப் பொதுக் கூட்டங்களில் நான் ஆற்றிய உரைகளைப் பதிவு செய்த பலர் பல வருடங்கள் கடந்திருந்தும் கூட இன்றுவரை பாதுகாத்து வைத்திருப்பதாக அறிய முடிகிறது.

பகிரங்கப் பிரச்சாரங்களோடு மட்டும் நான் நின்றுவிடவில்லை. குறித்த வனவிலங்கிற்கு எதிராக சிறிய அளவிலான பல நூல்கள் எழுதி அச்சிட்டு அவற்றை இலவசமாக வினியோகித்தும் வந்துள்ளேன். அவை நமது நாட்டில் வாழும் மார்க்க அறிஞர், பொது மக்கள் பலரிடம் இன்று வரை உள்ளன.

"வஹ்ஹாபிஸம்" என்ற கொடிய புலியை எதிர்த்து நான் ஆற்றிய உரைகள், எழுதிய நூல்கள் அதற்கு உணவூட்டியும், ஊட்டச் சத்துக்கள் கொடுத்தும் அதை வளர்த்து வருகின்றவர்களின் செவிகளில் ஏறவுமில்லை. கண்களைத் திறக்கவுமில்லை. அவை செவிடன் காதில் ஊதிய சங்கின் கதைபோலும், குருடனுக்கு வழங்கிய கண்ணாடியின் கதை போலுமாகிவிட்டன.

இந் நாட்டில் "வஹ்ஹாபிஸம்" என்ற காட்டுப்புலியை எதிர்த்து நான் மட்டும் பிரச்சாரம் செய்யவுமில்லை, நூல்கள் எழுதி வெளியிடவுமில்லை. என் போன்ற பல மார்க்க அறிஞர்களும், "ஸுன்னத் வல் ஜமாஅத்" கொள்கை வாதிகளும் பிரச்சாரம் செய்துமுள்ளார்கள். நூல்கள் வெளியிட்டுமுள்ளார்கள். எனினும் "வஹ்ஹாபிஸம்" என்ற வனவிலங்கின் அட்டூழியம் ஓய்ந்த பாடுமில்லை. ஒழிந்தபாடுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக அப்புலி தன் வயிற்றிலுள்ள நச்சுக் குண்டை பல்லின மக்களினது வழிபாட்டுத் தலங்களிலும், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் வெடிக்கச் செய்து நாட்டை நாசமாக்கியும், நாட்டின் அப்பாவி மக்களைக் கொன்றும் தனது கொடூர குணத்தைக் காட்டிக்கொண்டே இருக்கின்றது.

இதற்கான காரணம் இப் புலிக்குப் பின்புலமாக மார்க்க அறிஞர்களிற் சிலரும், மார்க்க அமைப்புக்களிற் பலதும், முஸ்லிம் அரசியல்வாதிகளிற் சிலரும், உலமா சபை உறுப்பினர்களிற் சிலரும் இருப்பதாகுமென்று பொது மக்கள் சந்தையிலும், சந்தியிலும் பேசிக் கொள்கின்றார்கள். இத்தகவல் இவ்வாறிருந்தாலும் ஆதாரத்துடனான தகவல் ஒன்றை இங்கு எழுத வேண்டியது அவசியமாயிற்று.

அதென்னவெனில் இஸ்லாமிய கலாச்சார அமைச்சுக்குள் இக் கொடூரப்புலி நுழைந்து அட்டூழியம் பண்ணுவதோயகும். இது நம்ப முடியாத ஒன்றாயினும் அவசியம் நம்ப வேண்டிய ஆதாரத்துடனான உண்மையாகும். எம்மிடம் ஆதாரம் உள்ளது. தேவையேற்படும்போது வெளிக் கொணரப்படும். அல்லது ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடைபெறும் வேளை முன்வைக்கப்படும்.

வஹ்ஹாபிஸம் என்பது திருக்குர்ஆனுக்கும், ஹதீது - நபீ மொழிகளுக்கும், இஸ்லாமிய அறிஞர்களான இமாம்கள், ஆன்மீக வழிகாட்டிகளான அவ்லியாஉகள் ஆகியோர்களினது வழிகாட்டலுக்கும் முரணானதென்பதை அறியாமல் அந்த வழிகேட்டில் விழுந்துள்ள மக்களுக்கு அறிவுரை வழங்கி அவர்களைக் கரை சேர்க்க முடியும். ஏனெனில் இது அறியாமை நோயாகும். இந் நோய்க்கு மருந்துண்டு. மாத்திரையுமுண்டு. உட்கொண்டால் சுகம் கிடைக்கும். இன்ஷா அல்லாஹ்! இக்காலத்தைப் பொறுத்தவரை படிப்பறிவும், ஆய்வுத்திறனும் இல்லாதவர்களே இந்நோயால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

ஆயினும் வஹ்ஹாபிஸ வெளிநாடுகளால், அல்லது வஹ்ஹாபிஸ அமைப்புக்களால் தமக்குக் கிடைக்கின்ற பணம், பொருள், பதவி என்பவற்றைக் கருத்திற் கொண்டு மட்டும் மனமுரண்டாக வஹ்ஹாபிஸத்தை ஆதரிப்போரை திருக்குர்ஆன், ஹதீதுகள் கொண்டும், இஸ்லாமிய அறிஞர்களான இமாம்கள், ஆன்மீகவாதிகளான அவ்லியாஉகள் ஆகியோர்களினது போதனைகள் கொண்டும் நல்வழிப்படுத்த முடியாது. ஏனெனில் இவர்கள் பணப் பேயாலும், பதவி மோகத்தாலும் பாதிக்கப்பட்டவர்களாவர். இவர்களுக்கு மருந்து மாத்திரை எதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன் தராது. திருக்குர்ஆனையும், ஹதீதுகளையும் கரைத்துக் குடிக்கக் கொடுத்தாலும் கூட இவர்களின் நோய் குணமாகமாட்டாது. இவர்களை அரசாங்கமே சட்டத்தின் முன் நிறுத்தி நடவடிக்கை எடுத்து இவர்களின் தீமையிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டும்.

வஹ்ஹாபிஸ காட்டுப்புலியின் அட்டூழியத்திலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்கு வழி யாதென்று ஒருவர் என்னிடம் கேட்டால் அவருக்கு நான் கூறும் ஆலோசனை வஹ்ஹாபிஸ அமைப்புக்கள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும், அதேபோல் வஹ்ஹாபிஸப் பிரச்சாரமும் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என்பதேயாகும். இது தவிர வேறு ஆலோசனை எதுவும் என்னிடமில்லை.

எனவே, அறியாமை நோய் காரணமாக வஹ்ஹாபிஸம் என்ற புலி வாலைப் பிடித்துத் தவிக்கும் அப்பாவிகளின் நன்மை கருதி 1700 பக்கங்கள் கொண்ட காட்டுப் புலிக்கு எதிரான ஒரு நூல் எழுதி சுமார் 65 இலட்சம் ரூபாய் செலவில் 3000 பிரதிகள் அச்சிட்டு அதை இலவசமாக வினியோகிக்க நாடியுள்ளேன். இன்ஷா அல்லாஹ் இந்நூல் வெளியீடு 24.01.2020 அன்று காத்தான்குடி பத்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாயலில் ஆடம்பரமெதுவுமின்றி நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. கலந்து கொள்வோர் பயன் பெறுவர்.

## விவாதம் ஒற்றுமைக்கு வழி வகுக்குமா?

ஸுன்னீ உலமாஉகளும், வஹ்ஹாபீ உலமாஉகளும் விவாதிப்பதன் மூலம் இப்பரச்சினை தீர்க்கப்படுவதற்கு சாத்தியமுண்டா? என்று பலர் கேள்வி எழுப்புகிறார்கள். இது தொடர்பாக எனது கருத்தை இங்கு எழுதுகிறேன்.

15.09.1951ம் ஆண்டு கல்முனை நகரில் குறித்த இரு பிரிவினர்களுக்குமிடையில் மிக விரிவான ஏற்பாட்டில் ஒரு விவாத மாநாடு நடைபெற்றது. விவாத மாநாட்டில் வஹ்ஹாபி தரப்பினர் படு தோல்வி அடைந்தனர். ஸுன்னீ தரப்பினர் வென்றனர். மாநாட்டில் பார்வையாளர்களாக இருபதாயிரம் பேர்கள் கலந்து கொண்டனர். ஸுன்னீ தரப்பினர் வென்றாலும் கூட வஹ்ஹாபிஸம் முற்றுப் பெறவில்லை. ஸுன்னீகள் பெயரளவிலேயே வென்றனர். இன்றுவரை கல்முனையில் வஹ்ஹாபிகள் தமது கொள்கையை பேசிக் கொண்டும், தமக்கென்று ஒரு ஜும்ஆ பள்ளிவாயல் நடத்திக் கொண்டுமே இருக்கின்றார்கள். விவாதத்தால் கண்ட பலன் ஒன்றுமில்லாமற் போயிற்று. இது 1951ம் ஆண்டு நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் இருபது வருடங்களுக்கு முன் இலங்கை மாத்தளை நகரில் குறித்த இரு தரப்பினர்களுக்குமிடையில் விரிவான ஏற்பாட்டில் ஒரு விவாத மாநாடு நடந்தது. இந்த மாநாடும் வெற்றி தோல்வியின்றி குழுப்பத்திலேயே முடிந்தது. எனினும் ஸுன்னீகள் தாமே விவாதத்தில் வென்றதாகக் கூறினார்கள். இதேபோல் வஹ்ஹாபிகள் தாமே வென்றதாக கூறினார்கள். தீர்க்கமான எந்த ஒரு முடிவும் எட்டப்படவில்லை.

இதேபோல் இந்தியா தமிழ் நாட்டிலும் இதுவரை பல ஊர்களில் பல விவாத மாநாடுகள் நடைபெற்றுள்ளன. எந்த ஒரு மாநாட்டிலும் தீர்க்கமான முடிவு எட்டப்படவில்லை. "அபுத்தலாயில்" ஷெய்கு அப்துல்லாஹ் ஜமாலீ ஹழ்றத் அவர்களுக்கு தொழிலே விவாதம்தான்.

பீ - ஜே கலந்து கொள்கின்ற விவாத மாநாடாயினும், கலந்து கொள்ளாத மாநாடாயினும் வஹ்ஹாபிகள் தமக்கு விவாதிக்க முடியாமற் போகும் போது தமது ஆதரவாளர்களைக் கொண்டு மாநாட்டைக் குழப்புவது அவர்களின் தொழிலாகப் போய்விட்டது.

எனவே, ஸுன்னீகளும், வஹ்ஹாபிகளும் விவாதித்து தீர்க்கமான முடிவை எட்டுதல் என்பது வீண் முயற்சி என்றே நான் கூறுவேன்.

இன்னுமொரு விடயத்தை இங்கு கூறுகின்றேன். அஷ்ஷெய்கு அலிய்யுல் கவ்வாஸ் றஹிமஹுல்லாஹ் என்ற ஸூபீ மகான் அவர்கள், மார்க்க விடயத்தில் தர்க்கம் செய்வதும், விவாதம் செய்வதும் மார்க்கம் கொணர்ந்த "ஷாரிஉ" ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தர்க்கம், விவாதம் செய்தல் போன்றதென்று கூறியுள்ளதாக இமாம் அப்துல் வஹ்ஹாப் அஷ் ஷஃறானீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: الميزان الخضريّة للإمام عبد الوهّاب الشعراني، ص - ٤٨)

இக்காலத்தைப் பொறுத்தவரை வாதியும், பிரதிவாதியும் விவாதத்திற்கென்று கால் பதிக்கும் போதே அவர்களின் "நிய்யத்" எண்ணம் கெட்டுவிடுகிறது. வாதி நினைக்கிறார் விவாதம் சரியோ பிழையோ பிரதிவாதியை தான் மடக்க வேண்டுமென்று. இவ்வாறுதான் பிரதிவாதியும் நினைக்கிறார். இருவரில் ஒவ்வொருவரும் தான் வெல்ல வேண்டுமென்று நினைப்பதன் மூலம் இருவரின் எண்ணமும் கெட்டுவிடுகின்றது. இவ் எண்ணம் إنما الأعمال بالنيات "செயல்கள் யாவும் எண்ணம் போலவே" என்ற நபீ மொழிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணாகிறது. ஆகையால் ஸுபீ மகான்கள் மார்க்க விடயத்தில் விவாதம் செய்வதை மண்ணளவும் விரும்பவில்லை. ஸுபீஸ வழி செல்லும் நாமும் அதை விரும்பவில்லை.

இதனால்தான் எந்த ஒரு மார்க்கப் பிரச்சினையாயினும், கொள்கைப் பிரச்சினையாயினும் அது விவாதம் மூலம் சரி பிழை காணப்படாமல் கலந்துரையாடல் மூலம் தீர்க்கப்பட வேண்டுமென்று நாம் கூறுகிறோம். இதுவே எமது குறிக்கோளுமாகும்.

வஹ்ஹாபிஸக் கருத்துக்கள் தொடர்பாகவோ, "வஹ்ததுல் வுஜூத்" கருத்துக்கள் தொடர்பாகவோ விவாதமின்றி கலந்துரையாடல் மூலம் உண்மையைக் கண்டறிய ஸுபிஸ வழி செல்லும் நானும், என்னுடனுள்ள உலமாஉகளும் எப்போதும் தயாராக உள்ளோம்.

இதைக் கருத்திற் கொண்டதினாற்தான் "வஹ்ததுல் வுஜூத்" தொடர்பாக மூன்று மணி நேரங்கள் அறிஞர்கள், ஆய்வாளர்கள் மத்தியில் நான் உரையாற்ற சந்தர்ப்பம் தாருங்கள் என்றும், உலமாஉகளில் ஆயிரம் பேர்கள் கலந்து கொள்ள விரும்பினாலும் வாருங்கள் என்றும் பகிரங்கமாக அழைத்தேன். எவரும் என் அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் உலமாஉகளில் ஒருவர் மட்டும் "இவர் பேசுவாராம், அதை நாங்கள் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமாம்" என்று இறுமாப்புடன் கர்ஜித்துள்ளார். இந்த மேதை إنمـــــا العلم بـــــالتعلّم "அறிவை கற்பதன் மூலமே பெற முடியும்" என்ற தத்துவத்தைப் புரியாத மேதையாக இருப்பதையிட்டு நான் கவலைப்படுகின்றேன்.

யாரோ ஒரு "முப்தீ", "வஹ்ததுல் வுஜூத்" தொடர்பாக அவருடனும், அவரின் வால்களுடனும் நேரில் பேசுவதற்காக பல தரம் அவர் என்னை அழைத்ததாகவும், அதற்கு நான் விருப்பம் தெரிவிக்கவில்லை என்றும் பட்டப் பகலில் பல இடங்களில் பகிரங்கமாகச் சொல்லி வருகின்றார். இவர் சொல்வது முற்றிலும் பொய். பொய் சொல்வது இவருக்கு கை வந்த கலையாகிவிட்டது.

வெசக் தினத்தன்று பௌத்த விகாரைக்குச் சென்று கையில் "வெசக் விளக்கு" ஏந்தி நின்ற இந்த முப்தியிடம் நீங்கள் செய்த இவ்வேலைக்குச் சட்டமென்ன? இதன் மூலம் நீங்கள் "முர்தத்" மதம் மாறிவிட்டீர்களா? இல்லையா? என்று நான்தான் எனது பகிரங்க உரைகளில் பல தரம் கேட்டுள்ளேன். பல கடிதங்களும் அனுப்பி வைத்தேன். ஒன்றுக்கும் ஒரு பதிலும் அவர் தரவில்லை. இவர்தான் என்னைப் பல தரம் அழைத்ததாகவும், அதற்கு நான் பதில் கூறவில்லை என்றும் கூட்டங்களில் குரைத்து தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டவாளங்களை மறைப்பதற்கு வழி தேடுகிறார்.

இவர் இவ்வாறு பிதற்றவும் தேவையில்லை, கதையைப் புரட்டவும் தேவையில்லை. நான் இவரை அன்பாகவும், கண்ணியமாகவும் கேட்டுக் கொள்கிறேன். முப்தீ ஸாஹிப் அவர்களே! நீங்கள் - உங்களின் உலமா சபை - அல்லாஹ்வுக்கும், றஸூலுல்லாஹ் அவர்களுக்கும், உலகில் தோன்றிய நபீமார், றஸூல்மார்கள் அனைவருக்கும், அவ்லியாஉகளுக்கும், தரீகாக்களின் ஷெய்குமார்களுக்கும், இன்று உலகலொம் வாழும் ஸூபீ மகான்களுக்கும் வழங்கிய "முர்தத்" மதம் மாறியவர்கள் என்ற உங்களின் "பத்வா" தீர்ப்பை வாபஸ் பெறுங்கள். அதோடு என்னையும், எனது கருத்தைச் சரிகண்டவர்களையும் கொலை செய்யலாம், அது ஆகுமென்று வழங்கிய தீர்ப்பையும் மீளப் பெறுங்கள். இன்றேல் இவ்வுலகில் அரச தண்டனையையும், மறுமையில் இறைவனின் தண்டனையையும் நீங்களும், உங்கள் தீர்ப்புக்கு உதவியவர்களும், அதைச் சரிகண்டு அமுல் படுத்தியவர்களும் சந்திக்க நேரிடும். சிந்தியுங்கள். சந்தியில் நிறுத்தப்பட்டு சட்டை களையப்படுமுன் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.

"வஹ்ததுல் வுஜூத்" وحدة الوجـود மெய்ப் பொருள் ஒன்றென்று நம்புவதே அசல் "ஈமான்" விசுவாசம் என்பதையும், "கத்றதுல் வுஜூத்" كـــــــــثرة الوجود மெய்ப் பொருள் பலதென்று நம்புதல் அசல் நிராகரிப்பென்பதையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

அன்பிற்குரிய பொது மக்களே!

"வஹ்ஹாபிஸ வழிகேடு நம் நாட்டுக்கு சாபக்கேடு" என்ற தலைப்பில் வஹ்ஹாபிஸத்திற்கு எதிராக சிறிய நூலொன்று எழுதி அச்சிட்டு 07.03.1997 அன்று இலவசமாக விநியோகித்தேன். அதே நூலை சிறிய மாற்றத்துடன் 01.01.2020 இன்று வெளியிட்டு இலவசமாக விநியோகிக்கின்றேன்.

"**யானை வரும் பின்னே**" என்று நான் சுட்டியது 24.01.2020 அன்று வெளியாகவுள்ள "**வான்மறை மறுக்கும் வஹ்ஹாபிஸம்**" என்ற நூலையும், "**மணி ஓசை வரும் முன்னே**" என்று சுட்டியது இச்சிறு நூலையும் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வஹ்ஹாபிஸ வழிகேடு நம் நாட்டுக்கு சாபக்கேடு!

முஸ்லிம் சகோதரர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும்

நமது இலங்கை நாட்டில் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் சந்து, பொந்துகளில் மறைந்தும், விரல் விட்டெண்ணக் கூடிய ஒரு சிலரால் பின்பற்றப்பட்டும் வந்த "வஹ்ஹாபிஸம்" பதினைந்து வருடங்களுக்குள் நாடெங்கும் காட்டுத் தீ போல் பரவி வருகின்றது. இதற்குக் காரணம் ஸஊதி நாட்டின் "ரியால்" என்ற பேரழகியில் மோகம் கொண்டு அவள் கொடுக்கும் சிற்றின்பப் போதையில் மயங்கி வாழும் நம் நாட்டைச் சேர்ந்த ஒரு சில பட்டதாரி உலமாஉகளும், இங்கு இயங்கி வருகின்ற வஹ்ஹாபிஸ காற்றுப்பட்ட ஒரு சில அறபுக் கல்லூரிகளும், போலிச் சேகுகளை உருவாக்கி வருகின்ற ஒரு பல்கலைக்கழகமுமேயாகும். இவர்களுடன் ஸஊதிக்கு வேலைவாய்ப்பில் சென்று வஹ்ஹாபிஸ நஞ்சூட்டப்பட்டவர்களும் சேர்ந்து கொண்டார்கள். இன்று ஐவர் வாழும் வீட்டில் இருவர் வஹ்ஹாபிகள் என்று சொல்லுமளவிற்கு வஹ்ஹாபிஸம் பரந்து விட்டது. "தீனுல் இஸ்லாம்" சத்திய மார்க்கம் காற் பந்து போல் அடிக்கப்படுகின்றது. மார்க்கத்தை மையமாகக் கொண்டு நாட்டிலும், வீட்டிலும் பிரச்சினை தலை தூக்கி விட்டது. கத்திக்குத்தும் நடக்கின்றது. துப்பாக்கிச் சூடும் இடம் பெறுகிறது.

எனவே, இக்கால கட்டத்தில் உண்மையைத் தெரிந்த ஒருவரின் மௌனம் கொலைஞனுக்குத் துணை நின்றது போலாகிவிடும் என்பதற்காகவும், இறைவன் தீர்ப்பு நாளில் உனக்குத் தெரிந்த உண்மையைச் சொன்னாயா? என்று என்னிடம் கேட்கும் போது இப்பிரசுரம் ஒரு சாட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் இப்பிரசுரத்தை பக்க சார்பற்ற மன நிலையுடனும், இக்லாஸுடனும் வாசிப்பவர்கள் நல்வழி பெறுவதற்கு இது ஒரு "வஸீலா" வழியாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் இதை வெளியிட்டேன்.

சுருங்கச் சொன்னால் "வஹ்ஹாபிஸம்" என்பது ஹிஜ்ரீ 661ம் ஆண்டு ஸஊதி நாட்டிலுள்ள ஹர்றான் என்ற ஊரில் பிறந்து டமஸ்கஸ் நகரில் வாழ்ந்து சிறையில் மரணித்த இப்னு தைமிய்யா என்பவரால் வித்திடப்பட்டு அதே நாட்டில் நஜ்து என்ற ஊரில் ஹிஜ்ரீ 1111ம் ஆண்டு பிறந்த முஹம்மத் இப்னு அப்தில் வஹ்ஹாப் என்பவரால் நீரூற்றி வளர்க்கப்பட்டு பரவலாக்கப்பட்ட கொள்கையாகும். இவர் கூறிய கொள்கையை இவருக்கு முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த எவருமே கூறியதே கிடையாது. இதனால் இவர் கூறிய கொள்கைக்கு இவரே கர்த்தாவாகவும், பொறுப்பாளராகவும் உள்ளார். உலகிலுள்ள முஸ்லிம் நாடுகளில் ஸஊதி நாட்டில் மட்டுமே இக்கொள்கை முழுமையாகப் பின்பற்றப்படுகின்றது. இவரின் கொள்கை பேசுவோர்தான் வஹ்ஹாபிகள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகள் அதிகம். அவற்றில் மிகப் பிரசித்தி பெற்று நாடெங்கும் பரவலாக அறியப்பட்டவற்றை மட்டும் உங்களின் நலம் கருதி இங்கு எழுதுகின்றேன். நீங்கள் இனங்கண்டு இதயசுத்தி பெறுங்கள்.

நபீமார்களைக் கொண்டும், வலீமார்களைக் கொண்டும் "வஸீலா" உதவி தேடுதல், "தலாயிலுல் கைறாத்" என்ற ஸலவாத் ஓதுதல், கஸீததுல் புர்தா, கஸீததுல் வித்ரிய்யா, கஸீதது பானத் ஸுஆத் போன்ற நபீ புகழ் பாடுதல், கத்தம், பாதிஹா, மௌலித், தலை பாதிஹா போன்றவை ஓதுதல், கப்றுகளை ஸியாறத் செய்தல், அவற்றை முத்தமிடுதல், ஸியாறத் செய்வதற்காகப் பிரயாணம் செய்தல், ஸியாறங்களை அலங்கரித்தல், ஸியாறங்களுக்கு முன்னால் கை கட்டி நிற்றல், கொடி ஏற்றுதல், சந்தனக் கூடு ஏற்றுதல், கந்தூரி கொடுத்தல், தல்கீன் ஓதுதல், மையித் வீட்டில் முதலாம், மூன்றாம், ஏழாம், முப்பதாம், நாற்பதாம் போன்ற குறிப்பிட்ட நாட்களில் யாஸீன் ஓதுதல், பொதுவாக மரணித்தவர்களுக்காக குர்ஆன் ஓதுதல், வீடு, கடைகளில் ஊதுபத்தி, சாம்பிராணி போன்றவை எரித்தல், மௌலித் போன்ற சமய நிகழ்ச்சி நடக்கும் சபையை மலரால் அலங்கரித்தல், "பறாஅத்" தினம் றொட்டி சுட்டு யாஸீன் ஓதுதல், ஒடுக்கத்துப் புதன் என்று கூறப்படும் ஸபர் மாதத்தின் இறுதிப் புதன் கிழமை வாழை இலையில் இஸ்ம் எழுதிக் குடித்தல், இஸ்ம் - தாயத்துக் கட்டுதல், ஊதிப்பார்த்தல், தண்ணீர் ஓதுதல், அப்துன் நபீ, அப்துர் றஸூல் என்று பெயர் வைத்தல், வலீமாரின் கப்றுகளில் சிறு குழந்தைகளை வளர்த்துதல், நபீமார்கள், வலீமார்கள் பெயரால் நேர்ச்சை செய்தல், "யா ஸெய்யிதீ யா றஸூலல்லாஹ்" பைத் ஓதுதல், "ஷெய்கு" ஞானகுருவிடம் "பைஅத்" ஞான தீட்சை பெறுதல், காதிரிய்யா, ஷாதுலிய்யா, றிபாஇய்யா போன்ற தரீகாக்களை பின்பற்றுதல், ஷெய்குமார்கள், பெரியார்களின் கை கால்களை முத்தமிடுதல், ஒரு பெரியாருக்கு எழுந்து நின்று மரியாதை செய்தல், தரீகாக்களின் றாதிபு வைத்தல், தறாவீஹ் தொழுகை இருபது றக்அத்துகள் என்று கூறல், "பாங்கு" சொல்லுமுன் ஸலவாத் சொல்லுதல், தொழுகையில் அத்தஹிய்யாத் ஓதும்போது சுட்டுவிரலை ஆட்டாமலிருத்தல், "றுகூஉ" நிலையிலிருந்து "இஃதிதால்" நிலைக்கு வந்தபின் மீண்டும் கையை நெஞ்சில் கட்டிக் கொள்ளாமலிருத்தல் போன்ற காரியங்கள் ஷிர்க் என்றும், பித்அத் என்றும் வஹ்ஹாபிஸத்தின் தந்தை முஹம்மத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்னு அப்தில் வஹ்ஹாப் சொல்லியுள்ளார். இவரின் கொள்கை வழி செல்லும் வஹ்ஹாபிகளும் இவ்வாறே சொல்கின்றார்கள்.

இவர் மேற்கண்டவாறு சொல்லியதுடன் மட்டும் அவர்கள் நின்றுவிடவில்லை. அல்லாஹ்வின் விடயத்தில் கூட மிகப் பாரதூரமான பிழையான கருத்துக்களையும் கூறியுள்ளார். அல்லாஹ் ஏழு வானங்களுக்கு அப்பால் உள்ள "அர்ஷ்" என்ற இடத்தில்தான் இருக்கின்றான் என்றும், அவன் அங்கிருந்து சில நேரம் முன் வானத்திற்கு இறங்குகிறான் என்றும், இடம் பெயர்கிறான் என்றும், அவனுக்கு சடம் உண்டு என்றும், கை, கால், முகம், கண் போன்ற குறிப்பிட்ட உறுப்புக்கள் மாத்திரம் உண்டு என்றும் சொல்லியுள்ளார். இவரின் கொள்கை வழி நடப்பவர்களும் இவ்வாறே சொல்கின்றார்கள்.

இவர் இவ்வாறு சொல்லியிருப்பதுடன் தனது கொள்கையை ஏற்றுக் கொள்ளாத அனைவரும் இணை வைத்த முஷ்ரிக் ஆவார்கள் என்றும், "கஸீததுல் புர்தா" என்ற நபீ புகழ் காப்பியத்தை யாத்த இமாம் பூஸீரீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் முஷ்ரிக் என்றும், "ஸனமுன் கபீர்" பெரிய சாமி என்றும், "தலாயிலுல் கைறாத்" என்ற ஸலவாத்தை இயற்றிய இமாம் ஜஸூலீ றஹிமஹுல்லாஹ் அவர்கள் முஷ்ரிக் என்றும் சொல்லி அவரின் காலத்தில் இருந்த "தலாயிலுல் கைறாத்" நூல் பிரதிகளையெல்லாம் எரித்துச் சாம்பராக்கியுமுள்ளார். நபீ முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணித்து மண்ணுடன் மண்ணாகி விட்டபடியால் ஒருவன் தனது கைத்தடி கொண்டு பெறும் பயனைக் கூட முஹம்மதைக் கொண்டு பெற முடியாதென்றும் சொல்லியுள்ளார். பாங்கு சொல்வதற்கு முன்னர் ஸலவாத் சொல்லுதல் கூடாதென்று கூறிய இவர் தனது கட்டளையை மீறி பாங்கு சொல்லுமுன் ஸலவாத் சொன்ன ஒரு முஅத்தினையும் வெட்டிக் கொன்றுள்ளார். இவர் தந்திரத்தில் நரியாகவும், வஹ்ஹாபிஸத்தில் பரியாகவும் விளங்கினார்.

இவரின் கொள்கை வழி வாழும் இலங்கை நாட்டு வஹ்ஹாபிகள் இவர் போல் நரிகளாயிருப்பதினால்தான் அல்லாஹ்வைப் பற்றிய தமது கருத்துக்களை பரவலாகவும், பகிரங்கமாகவும் இப்போது வெளியிடாமல் மேலே நான் எழுதிக் காட்டிய விடயங்களை ஒழிப்பதில் மாத்திரம் முழுமுயற்சி எடுத்து வருகின்றார்கள். காலப்போக்கில் காலூன்றிய பிறகுதான் இறைவனைப் பற்றிய தமது விஷமக் கருத்துக்களை வெளியிடுவார்கள். இருந்து பாருங்கள்.

வஹ்ஹாபிஸத்தின் மூலவர் இப்னு அப்தில் வஹ்ஹாப் ஒரு "முஜத்தித்" சீர் திருத்தவாதியென்று சிலர் பேசுவதாக நான் அறிகிறேன். இவ்வாறு சொல்வோர் அவரின் வரலாறு தெரியாதவர்களாயிருக்கலாம். அல்லது தமது சுயநலன் கருதி அவ்வாறு சொல்லியிருக்கலாம். சத்தியம் சந்திக்கு வராமற் போகாது. அல்லாஹ் யாவும் அறிந்தவன்.

இவ்வாறுதான் வஹ்ஹாபிஸம் என்று ஒன்றில்லை என்று சொல்பவர்களுமாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு நாம் கூறும் அறிவுரை ஏறாது. நாம் கற்பிக்கும் பாடம் பயனளிக்காது. இவர்கள் தமது அறியாமையால் சொல்லியிருந்தால் அல்லாஹ் மன்னிப்பான். தமது சுயநலன் கருதிச் சொல்லியிருந்தால் மிக விரைவில் அல்லாஹ் இவர்களுக்கு ஒரு பாடம் கற்பிப்பான். அவன் எதற்கும் சக்தியுள்ளவன்.

## முஸ்லிம் சகோதரர்களே!

நீங்கள் வழி தவறிவிடாமல் இருப்பதற்காக வஹ்ஹாபிஸக் கொள்கைகளில் ஒரு சிலதை எழுதிக் காட்டினேன். இது எனது கடமை. ஏற்றுச் செயல்படுவதும், எறிந்து நடப்பதும் உங்களைப் பொறுத்ததே. வஹ்ஹாபிஸம் இஸ்லாத்திற்கு முரணானதென்று நீங்கள் நம்புங்கள். அதை ஆதாரத்துடன் அறிந்து கொள்ளக் கூடிய அறிவாற்றல் உங்களுக்கு இருந்தால் அவ்வாறு அறிந்து நம்புங்கள். அதுதான் எவராலும் அசைக்க முடியாத "ஹக்குல் யகீன்" நம்பிக்கை எனப்படும். நீங்கள் படிப்பறிவும், ஆராயும் திறனும் இல்லாதவர்களாயிருந்தால் வஹ்ஹாபிஸம் வழிகேடு என்று கண்ணை மூடிக் கொண்டு நம்புங்கள். தீர்ப்பு நாளில் அல்லாஹ்வின் சமூகத்தில் உங்கள் நம்பிக்கை சரியானதென்பதற்கு நானும், ஸுன்னத் வல் ஜமாஅத் உலமாஉகளும், வலீமார்களும் சாட்சியாக இருப்போம். வஹ்ஹாபிஸ வழி நடந்து படுகுழியில் விழுந்து விடாதீர்கள். வஹ்ஹாபிஸம் தொடர்பாக விரிவான விளக்கம் பெற நீங்கள் விரும்பினால் என்னை அணுகுங்கள். அல்லது நான் மிக விரைவில் வெளியிடவுள்ள 1700 பக்கங்கள் கொண்ட **"வான்மறை மறுக்கும் வஹ்ஹாபிஸம்"** என்ற நூலை பொறுத்திருந்து பாருங்கள்.

## வஹ்ஹாபிகளே!

### ஸலாமுன் அலா மனித்தபஅல் ஹுதா

நீங்கள் வஹ்ஹாபிஸத்தை இஸ்லாமென்று நம்பியிருப்பதற்கும், அதைப் பரப்ப முயற்சிப்பதற்கும் பின்வரும் இரண்டு காரணங்களில் ஒன்று அல்லது இரண்டும் நிச்சயமாக இருக்க வேண்டும். ஒன்று வஹ்ஹாபிஸம் இஸ்லாத்திற்கு முரணான தென்பதை நீங்கள் அறிந்து கொள்ளாமல் இருக்க வேண்டும். அல்லது தெரிந்திருந்தும் வஹ்ஹாபிஸ நாடுகளின் வருவாய்க்காக இருக்க வேண்டும்.

முந்தினது உங்களைப் பீடித்துள்ள "ஜஹாலத்" அறியாமை நோயாகும். இரண்டாவது உங்களைப் பிடித்துள்ள "ஹுப்புல் மால்" பணப்பேயாகும்.

நீங்கள் முந்தின நோயாளர்களாயிருந்தால் அதற்குத் தரமான ஊசி, மற்றும் மருந்து மாத்திரைகளும், அதி சக்தி வாய்ந்த டானிக் வகைகளும் உண்டு. நீங்கள் நோய் நீங்கிச் சுகதேகிகளாக விரும்பினால் பத்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாயல் வீதியில் அமைந்துள்ள "அல்ஜாமிஅதுர் றப்பானிய்யா" மருத்துவமனைக்கு அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை ஸூபிஸ ஜம்இய்யதுல் உலமாவுக்கு விரையுங்கள். மூன்றே மூன்று நாட்களில் நீங்கள் சுகம் பெற்று டிக்கட்டும் வெட்டிக் கொண்டு சுகதேகிகளாக வீடு திரும்புவீர்கள். மூன்று நாட்களும் உங்களுக்குத் தேவையான உணவு, தங்குமிட வசதி என்பன செய்து தரப்படும். அனைத்தும் FREE. இம் மருத்துவமனையில் MBBS முதல் FRCS வரை படித்துப் பட்டம் பெற்ற தரமான வைத்திய நிபுணர்கள் சேவை செய்கின்றனர். குறிப்பாக அறுவை சிகிச்சை நிபுணர்களும் உள்ளார்கள்.

நீங்கள் பணப்பேயால் பிடிக்கப்பட்டவர்களாயிருந்தால் அப்துல் ஜவாத் ஆலிம் வீதியில் அமைந்துள்ள "ஹமவோஸ்த்" மருத்துவமனைக்கு விரையுங்கள். உங்களின் நோயை "தஸவ்வுப்" ஸூபிஸம் XRAY மூலம் கண்டு பிடித்து ஹமவோஸ்த் என்ற அறுவை சிகிச்சை செய்து உங்கள் உள்ளத்தை ஆட்கொண்டுள்ள பணப்பேயை விரட்டியடித்து உங்களைக் காப்பாற்றலாம். இன்ஷா அல்லாஹ்.

நோய்க்கும், பேய்க்கும் மருந்தும், மருத்துவமனையும் இருக்கும் போது நீங்கள் நோயுடன் அல்லல் படுவதேன்? ஆப்பிழுத்த குரங்கு போல் அவதிப்படுவதேன்? வாய்க்கு வந்த மாதிரி உளறித்திரிவதேன்? அல்குர்ஆனின் ஆதாரம் கொண்டும், ஹதீதுகளின் ஆதாரம் கொண்டும், உலகத்து அறிஞர்களால் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இமாம்கள், அவ்லியாஉகளின் ஆதாரங்கள் கொண்டும் எதெல்லாம் ஷிர்க் என்றும், பித்அத் என்றும் நீங்கள் சொல்கின்றீர்களோ அதெல்லாம் இஸ்லாம்தான் என்று நிரூபித்துக் காட்டவும், அல்லாஹ்வைப் பற்றி நீங்கள் கூறும் கருத்து குர்ஆனுக்கும், இஸ்லாமிய அகீதா - கொள்கைக்கும் முரணானதென்று நெறிப்படுத்திக் காட்டவும் முடியும். நீங்கள் வருவீர்களா? வாக்குவாதமோ, பிடிவாதமோ இல்லாமல் உண்மையைக் கண்டறிந்து அவ்வழி நடக்கும் நன் நோக்கம் உங்களிடமிருந்தால் என்னிடம் வாருங்கள். நீங்கள் தவறில் இருந்தால் நீங்கள் திருந்துங்கள். நான் தவறில் இருந்தால் என்னைத் திருத்துங்கள். நீங்கள் ஆயிரம் பேரைத் திருத்துவதைவிட என்னைத் திருத்துவதில் அதிக பலன் உண்டு. பல்லாயிரம் பேர் என்னுடன் திருந்திவிடுவார்கள் அல்லவா? உங்களுக்காக என் வாயில் என்றும் திறந்திருக்கும். நீங்கள் எந்த முடிவு எடுத்தாலும் அதைப் பகிரங்கமாக அறிவியுங்கள். பற்றைக்குள் பதுங்கிக் கொண்டு ஊளையிடாதீர்கள். வஹ்ஹாபிஸம் தான் இஸ்லாம் என்று நீங்கள் நிரூபித்தால் நானும் உங்களுடன் சேர்ந்து அந்த இஸ்லாத்தைப் பரப்ப உழைப்பேன். அல்லது அது பிழையென்று நான் நிரூபித்தால் நீங்கள் என்னுடன் சேர்ந்து நான் கூறும் இஸ்லாத்தைப் பரப்ப உழையுங்கள். எமக்கு விவாதம் வேண்டாம். கலந்துரையாடி ஹக்கை - சத்தியத்தை கண்டறிவோம் வாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வஹ்ஹாபிகளே!

நீங்கள் வெளிநாடுகளில் படித்ததால் படிப்பில் உங்களை மிஞ்சியவர்கள் உலகெங்கும் கிடையாதென்று நினைக்கின்றீர்களா? அங்கு படித்தவர்கள் மட்டும்தான் இஸ்லாத்தைச் சரியாகப் புரிந்தவர்கள் என்றும் கணிக்கின்றீர்களா? அவ்வாறு நினைக்கவும் வேண்டாம், கணிக்கவும் வேண்டாம். இந்த நினைப்பும், கணிப்பும் உங்களின் மமதையின் அசைவும், மடமையின் அசைவுமேயாகும். அறிவு ஞானமென்பது இடத்தைப் பொறுத்ததுமில்லை. கட்டுப்பாடுடையதுமில்லை என்ற உண்மையை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். திருக்குர்ஆனின் 18-65ம் வசனப்படி எந்த ஒரு நாடு செல்லாமலும், எந்த ஒரு கல்விக் கூடத்தில் கற்றுக் கொள்ளாமலும், எந்த ஒரு மனிதனை ஆசானாகக் கொள்ளாமலும் பெறக் கூடிய ஒரு வகை அறிவு உண்டு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இவ்வறிவு ஸஊதியில் இருந்தாலும் கிடைக்கும். சரண்தீவில் இருந்தாலும் கிடைக்கும். அப்புஹாமியின் அடுத்த வீட்டில் இருந்தாலும், அருணாசலத்தின் அடுத்த வீட்டில் இருந்தாலும், அப்துல்லாஹ்வின் வீட்டில் இருந்தாலும் அல்லாஹ் நாடியவர்களுக்கு கிடைக்கவே செய்யும்.

எனவே, நாட்டையும், ஆடையையும், ஆளையும் வைத்து அறிவை எடை போடாமல் அறிவை வைத்து நாட்டையும், ஆடையையும், ஆளையும் எடை போடுங்கள்.

ما كل سوداء تمرة - وما كل حمراء جمرة

## ஸுன்னத் வல் ஜமாஅத் உலமாஉகளே!

அஸ்ஸலாமு அலஸ்ஸுன்னிய்யீனல் முவஹ்ஹிதீன்.

நாங்கள் ஸுன்னத் வல் ஜமாஅத் உலமாஉகள் என்று உதட்டால் மட்டும் நீங்கள் சொல்லிக் கொண்டும், பாதிஹா, மௌலித் ஓதி பணம் பெற்றுக் கொண்டும், வீட்டுக்குள் பதுங்கிக் கொண்டும் வஹ்ஹாபிஸம் பிழையானதென்று நாலு பேரிடம் மட்டும் இரகசியம் பேசிக் கொண்டும் இருந்தால் வஹ்ஹாபிஸத்தை எதிர்த்து ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை நிலை நாட்டியவர்களாகி விடலாமென்று நீங்கள் நினைக்கின்றீர்களா? இதனால் அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பிக் கொள்ளலாமென்று கனவு காண்கின்றீர்களா? உங்களின் நினைப்பு தப்பானது. உங்களின் கனவு பொய்யானது. உங்களில் சுட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டக் கூடிய ஒரு சிலர் மாத்திரமே வஹ்ஹாபிஸத்தைப் பேச்சு மூலமும், எழுத்து மூலமும் எதிர்க்கின்றீர்கள். மற்றவர்கள் யாவரும் உறங்கிக் கொண்டு ஊமைகளாக இருக்கின்றீர்கள். உங்களை வைத்துக் கொண்டு ஒரு வஹ்ஹாபி தனது விஷமக் கருத்தை வெளியிட்டால், வெள்ளிக்கிழமை குத்பா பிரசங்கத்தில் மௌலிது ஓதுவது ஷிர்க் என்றும், அவ்லியாஉகளிடம் உதவி தேடுதல் ஷிர்க் என்றும், நபீகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நம் போன்ற சாதாரண மனிதன் என்றும், நமக்கு மடமை இருப்பது போன்று அவர்களுக்கும் மடமை இருந்தது என்றும் சொன்னால் இமாம் ஸமக்ஷரீ அவர்களின் ஆடு தலையாட்டிய கதை போலும், பேயன் பலாப் பழத்தை பார்த்த கதை போலும் நீங்களும் தலையாட்டிக் கொண்டும், அவரைப் பார்த்துக் கொண்டும் தான் இருக்கின்றீர்கள். அவரை எதிர்த்து கருத்துக் கூற உங்களுக்குத் தைரியமில்லை. அல்லது உங்களிடம் சரக்கு இல்லை. நீங்கள் கோழைகளும், சரக்கில்லாத கப்பல்களுமாவீர்கள். நபீகள் கோமான் நம் போன்ற சாதாரண மனிதன் என்ற இஸ்லாத்திற்கு எதிரான வஹ்ஹாபிஸ வேல் உங்களின் உள்ளத்தைக் குத்தவில்லையா? அவர்கள் ஒரு மடையன் என்ற ஈமானுக்கெதிரான வஹ்ஹாபிஸத் தீ உங்களின் உள்ளத்தை சுடவில்லையா? ஒருவனுக்கு அவனின் பெற்றோரை விடவும், பிள்ளைகளை விடவும், ஏனைய மனிதர்களை விடவும் நான் மிக விருப்பமுள்ளவனாக ஆகும் வரை அவன் விசுவாசியாக மாட்டான் என்ற செம்மல் நபீயின் செய்யுள் உங்கள் செவிகளைத் துழைக்கவில்லையா? நீங்கள் செவிடர்களா? அல்லது சாய்ந்தால் சாய்கிற பக்கம் சாய்கின்ற செம்மறி ஆடுகளா? நீங்கள் யார் சொல்லுங்கள். "பாதில்" அசத்தியம் சொல்லப்படும் பொழுது அதை மறுத்துரைக்காமல் மௌனியாயிருப்பது அசத்தியத்தை நிலை நாட்ட உதவியதாக ஆகாதா? அசத்தியத்துக்கு உதவியவன் இஸ்லாமென்ற கட்டிடத்தை உடைப்பதற்கு உதவிவிட்டான் என்ற நபீ மொழி உங்களுக்குத் தெரியாதா? நான் கூறிய உண்மையான இஸ்லாமிய அடிப்படைத் தத்துவத்தை அதற்கு விரோதமானதென்று கற்பனை செய்து கொண்டு பத்வா வழங்கிய நீங்கள் ஈமானுக்கும், இஸ்லாத்திற்கும் முரணான வஹ்ஹாபிஸக் கருத்துக்களைக் கேட்டுக் கொண்டு மௌனிகளாயிருப்பதேன்? இதற்கு பத்வா வழங்குவது ஷரீஆ இல்லையா?

எனவே, வஹ்ஹாபிஸத்தை அழித்தொழிக்க நீங்கள் முன் வாருங்கள். இதற்கு நீங்கள் முன்வராமல் நாங்கள் ஸுன்னத் வல் ஜமாஅத் உலமாஉகள் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனுமில்லை. இறுதியில் அவர்களுடன் நீங்களும் சேர்ந்து இஸ்லாத்தைக் குழியிலிட்ட பாவிகளாகி விடுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் உங்களை ஸுன்னத் வல் ஜமாஅத் உலமாஉகள் என்று சொல்லிக் கொண்டாலும் எனது பார்வையில் நீங்கள் இன்னமும் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையையும், வஹ்ஹாபிஸத்திற்கு மறுப்பான ஆதாரங்களையும் தெரிந்து கொள்ளவில்லை என்றே நான் கூறுவேன். இதனால்தான் மதனீ, ரியாதீ, நளீமீ என்ற பெயர்களைக் கேட்டதும் நிலத்தில் குதி கால் படாமல் ஓடி ஒழிக்கின்றீர்கள். நீங்கள் அறிந்தோ, அறியாமலோ எனக்கு "முர்தத்" என்று பத்வா வழங்கிவிட்டீர்கள். ஆகையால் என்னை விட்டுவிடுங்கள். நீங்கள் முஸ்லிம்கள்தானே நீங்களாவது ஒன்று சேர்ந்து வஹ்ஹாபிஸ வழிகேட்டிற்கு குழி வெட்டுங்கள். அதைப் பகிரங்கமாக எதிர்த்து முறியடிக்க முன்வாருங்கள். பெற்றிக்கும், மெயினுக்கும் பாடாதீர்கள். முக்காட்டுக்குள் கையாட்டாதீர்கள். முழுமதியை முந்தானையால் மறைக்காதீர்கள். அவர்களை எதிர்க்க உங்களுக்குச் சக்தியில்லாவிட்டால் அவர்களுடன் சேர்ந்து வஹ்ஹாபிஸம் பேசுங்கள். ஸுன்னத் வல் ஜமாஅத் என்ற போர்வையில் மௌனிகளாயிருப்பதை விட அவர்களுடன் சேர்ந்து வஹ்ஹாபிஸம் பேசுவது மேலானதேயாகும். பூனை வேஷம் போட்டுக் கொண்டு எலி பிடிக்கத் தெரியாமலிருப்பது கேவலம்.

ஸுன்னத் வல் ஜமாஅத் உலமாஉகளான உங்களுக்கு வஹ்ஹாபிஸ முகாமை தரைமட்டமாக்குவதற்கு எந்த ஆயுதம் வேண்டுமானாலும் என்னை அணுகுங்கள். என்னிடம் அல் குர்ஆன், அல்ஹதீது, அக்வாலுல் ஆரிபீன், அஹ்காமுல் அஇம்மா போன்ற பயங்கர நவீன ஆயுதங்கள் இருக்கின்றன.

அதேபோல் நான் பேசி வருகின்ற "வஹ்ததுல் வுஜூத்" - "வுஜூத்" ஒன்றே, மூலப் பொருள் ஒன்றே, எல்லாம் அவனே, "ஹமவோஸ்த்" என்ற ஞானம் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினாலும் என்னை அணுகுங்கள். திருக்குர்ஆனிலிருந்தும், ஸஹீஹான ஹதீதுகளிலிருந்தும், நீங்கள் ஏற்றுக் கொண்டு "பத்வா"வுக்கு ஆதாரமாக எடுத்த "அத்துஹ்பதுல் முர்ஸலா", "அல் யவாகீது வல் ஜவாஹிர்", "அல்புதூஹாதுல் மக்கிய்யா" போன்ற நூல்களில் இருந்தும் ஆதாரம் காட்டி நிரூபிக்கின்றேன். எனது கூற்றைப் பிழையென்று நீங்கள் நிரூபித்தால் நீங்கள் கூறும் இஸ்லாத்திற்கு நான் வருகிறேன். உங்கள் கூற்றைப் பிழையென்று நான் நிரூபித்தால் நான் கூறும் இஸ்லாத்திற்கு நீங்கள் வாருங்கள். வருவீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடி உலமாஉகளே!

## லா ஸலாம அலைக்கும் வலா கலாம மஅகும்.

நமதூரில் வஹ்ஹாபிஸம் தலை நீட்டி வருவதும், வஹ்ஹாபிஸ முகவர்கள் தமது சுய நலத்திற்காகவும், வஹ்ஹாபிஸ நாடுகளால் தமக்குக் கிடைக்கின்ற வருவாய்க்காகவும் வஹ்ஹாபிஸ நச்சுக் கருத்துக்களை பொது மக்களின் உள்ளத்தில் விதைத்து வருவதும், அவ்விதை முளைத்து குதிரை வேகத்தில் வளராவிட்டாலும் ஆமை வேகத்திலாவது வளர்ந்து வருவதும் இதனால் நமதூரில் பல நூறு வருடங்களாகப் பின்பற்றப்பட்டு வந்த மௌலிது, கத்தம், பாதிஹா, றாதிபு போன்ற சமய நிகழ்ச்சிகள் குறைந்து வருவதும், நமதூர் இளைஞர்களிற் பலர் இக்கருத்தால் கவரப்பட்டு வஹ்ஹாபிஸக் குஞ்சுகளாக மாறிவருவதும், நமதூர் பள்ளிவாயல்கள், மத்றஸாக்கள் போன்றவற்றின் நிர்வாகத்தினுள் வஹ்ஹாபிகள் நுழைந்து அவற்றை வஹ்ஹாபிஸத் தலங்களாக மாற்றி வருவதும் உங்களுக்குத் தெரியுமா? தெரியாதா? தெரிந்திருந்தும் நீங்கள் மௌனிகளாகவும், அந்த "பித்அத்" வாதிகளை மின்பர் மேடைகளில் ஏற்றியும், கூட்டங்களில் அவர்களை வாழ்த்தியும், அவர்களைப் பின் தொடர்ந்து தொழுதும் வருகின்றீர்கள். இதற்கு இஸ்லாத்தில் இடமுண்டா? இப்னு உமர் றழியல்லாஹுஅன்ஹுமா அவர்களிடம் ஒருவர் வந்து உங்களுக்கு இன்னான் ஸலாம் சொன்னான் என்று சொன்ன பொழுது அவனுக்கு பதில் சொல்லாமல் அவன் பித்அத் காரன், அவனுக்கு எனது ஸலாத்தைச் சொல்லிவிடாதீர் என்று சொன்ன ஹதீது உங்களுக்குத் தெரியாதா? இதற்கு நீங்கள் என்ன நியாயம் சொல்வீர்கள்? இதற்கு எவ்வாறு பத்வா கொடுப்பீர்கள்? "மன் வக்கற ஸாஹிப பித்அதின் பகத் அஆன அலா ஹத்மில் இஸ்லாம்" "பித்அத்" உடையவனைக் கண்ணியப் படுத்தியவன் இஸ்லாத்தை உடைப்பதற்கு உதவிவிட்டான் என்ற நபீ மொழியின் படி நீங்கள் யார்? ஒன்றோ நீங்கள் ஸுன்னீகளாயிருந்து செயல்படுங்கள். இன்றேல் அவர்களின் பட்டியலில் சேர்ந்து கொள்ளுங்கள். வேஷம் போட்டு மோஷம் போகாதீர்கள். சுய நலனுக்காகவும், சுகபோகத்திற்காகவும் "தீனை" வியாபாரச் சரக்காகவும், விளையாட்டுப் பொருளாகவும் ஆக்கிவிடாதீர்கள். இலங்கையில் இன்னுமொரு ஸஹ்றான் உருவாக வழி செய்யாதீர்கள். இன்னுமொரு ஸஹ்றான் உருவாகும் சிக்னல் தெரிகிறது. அவனின் வெளிப்பாடு தஜ்ஜாலின் வெளிப்பாட்டை விட மிக வேகமானதாகவும், மிக மோஷமானதாகவும் இருக்கும். இன்னும் சில மாதங்களில் ஐ. எஸ். பயங்கரவாதிகளின் தாக்குதல் இலங்கையில் மிக மோஷமானதாக இருக்கும் என்பது எனது யூகமாகும்.

வஹ்ஹாபிஸம் பற்றியோ, "வஹ்ததுல் வுஜூத்" பற்றியோ அறிந்து தெளிவு பெற விரும்பும் உலமாஉகள், பட்டதாரிகள், பொது மக்கள் நேரிலோ, கடிதம் மூலமோ, தொலைபேசி மூலமோ என்னுடன் தொடர்பு கொண்டு சந்திப்புக்கான நேர காலத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும், சத்தியத்தை அறிந்து அவ்வழி நடக்க வேண்டும் என்ற "இக்லாஸ்" தூய "நிய்யத்" உடன் மட்டும் வருமாறும் அன்பாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹஜ் வியாபாரிகளே!

உங்களின் சித்திரை "சீஸன்" நெருங்கிவிட்டது. நீங்கள் நித்திரைக்கு முத்திரை குத்திவிட்டு சித்திரைக் கொள்முதலில் குதித்து விட்டீர்கள். செல்வந்தர்களின் வீடு தேடி வீதியெங்கும் பவனி வருகின்றீர்கள். செல்வந்தர்களைக் கண்டால் அவர்களுக்கு ஸலாம் கூறிக் கை குலுக்கி குசலம் விசாரிக்கின்றீர்கள். ஏழைகளைக் கண்டால் கோழைகள் போல் தலை குனிந்து செல்கின்றீர்கள். ஹஜ் வணக்கத்தை கச்சவடமாக்கி அதில் ருசி கண்டு விட்டீர்கள். சென்ற வருட சித்திரையில் கிடைத்த ருசி இன்னமும் உங்களுக்கு இனித்துக் கொண்டே இருக்கின்றது. உங்களின் "ஹால்" பொரித்த மீனில் ருசி கண்ட கடுவனின் ஹாலாகி விட்டது. நீங்கள் வஹ்ஹாபிஸத்தை எதிர்த்தால் ஸஊதி செல்ல முடியாமற் போய் அதனால் உங்களின் வருவாயும் கெட்டுவிடுமென்பதற்காக அதை எதிர்க்காமல் வஹ்ஹாபிகளுடன் சேர்ந்து அவர்களுக்கு வாலாட்டியும், அவர்களின் வழிகேட்டிற்கு "தந்தனா" பாடியும் வருகின்றீர்கள். சுயநலனுக்காக மார்க்கத்தை விட்டுக் கொடுத்தும், அதை விற்றும் வாழ்கின்றீர்கள். உங்களிடம் பொது நல நோக்கமும், பரந்த மனப்பான்மையும் இருந்தால் நமதூர் உலமாஉகளில் ஹஜ் செய்ய வேண்டுமென்ற ஆவல் இருந்தும் பொருளாதார வசதியின்மையால் ஏங்கிக் கொண்டிருக்கும் பல நூறு உலமாஉகளுக்கு அந்த வாய்ப்பை வழங்கியிருப்பீர்கள். ஆனால் உங்களில் குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டுமே வருடந் தோறும் அந்த வாய்ப்பை பயன்படுத்தி வருகின்றீர்கள். உங்களின் இந்த நடவடிக்கை - ஹஜ் வியாபாரம் - உங்களின் சுயநலம் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. என்னையும், என்னுடனுள்ள உலமாஉகளையும் விட்டு விடுங்கள். நீங்கள் அழைத்தாலும் உங்களுடன் வருவதற்கு நாம் தயாராக இல்லை. ஆனால் உங்களுடன் இருக்கும் உலமாஉகளுக்காவது அந்த வாய்ப்பை வழங்குங்கள். வழங்குவீர்களா? அல்லது தொடர்ந்தும் கடுவனாயிருக்கத்தான் விரும்புவீர்களா? ஸஊதி ரியாலுக்காகவும், சரண்தீவின் ரூபாய்க்காகவும் சன்மார்க்கத்தை மாசுபடுத்தாதீர்கள். வஹ்ஹாபிகளுடன் சேர்ந்து "ஷரீஆ"வுக்கு குழிதோண்டாதீர்கள்.

## இலங்கை அரசுக்கு அடியேனின் ஆலோசனை!

நான் பிறந்த இச்சிறப்பான நாட்டை என்னுயிரைவிட நான் நேசிக்கின்றேன். இந் நாடு செழித்துயர வேண்டுமாயின், இந் நாட்டில் வாழும் அனைத்து மக்களும் இன, மத, மொழி பேதமின்றி ஒரு தாய் தந்தையின் பிள்ளைகள் போல் கை கோர்த்து நிம்மதியாக வாழ வேண்டுமாயின் இந் நாட்டில் பயங்கரவாதம் என்பது எந்தப் பெயரில், எந்த நிறத்தில் தலை தூக்கினாலும் அது வேருடன் அறுத்தெறியப்பட வேண்டும்.

ஸஹ்றானின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலோடு அவனின் பயங்கரவாதக் கதை முற்றுப் பெறவில்லை. அவன்தான் இறந்தான். அவனின் கனவு இறக்கவில்லை. இன்னும் சில மாதங்களில் இன்னுமொரு ஸஹ்றான் தோன்றலாம். இவ்விடயத்தில் அரசு மிக விழிப்போடு இருக்க வேண்டும்.

நான் இந்த நாட்டில் பிறந்தவன். இதை நேசிக்கின்றவன் என்ற வகையில் என் ஆன்மீக சிந்தனையில் தோன்றிய ஆலோசனைய்யை முன்வைத்துள்ளேன். அல்ஹம்துலில்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்தும் விருந்தும்


அன்பினிய நெஞ்சங்களே!
அல்லாஹ்வை ஏகனெனக் கொள்ளுங்கள்
அவனது ஒளியே நூறே முஹம்மதிய்யா
அதனொளியே அனைத்துமாயுள்ளதெல்லாம்
அண்ணலார் அருளிய அருள்வாக்குமிதுவே
ஆதி றஸூல் வழியும் அல்லாஹ்வின் அருள்மறையும்
ஆதாரமாய் இருக்க
இதற்கு நேர்மாறாய்
இமாம்களை ஒதுக்கி
இறை நேசர்களை வெறுத்து
இஸ்லாத்தை இடித்திட ஏன் துணிந்தீர்
ஈடில்லா நபீ மொழியின்
உண்மையறியாது உயர் வழி புரியாது
ஊதாரியாய் ஏனிங்கு ஊசலாடுகிறீர்?
எல்லாம் அவனெனும் ஏக இறைக் கொள்கையை
ஐயமற அறிந்திடு ஐயமறுத்திடு - அதுவே
ஒப்பற்ற ஓரிறைக் கொள்கையாகும்
ஒவ்வாத வஹ்ஹாபிஸம் ஒருபோதும்
ஓரிறைக் கொள்கையாகாது என
ஓதுமறி ஞோரின் உயர் வழி நாடு
ஔடதம் அதுவே
ஃஅஹ்து அகம் திறக்கும் மாமருந்து
அறிந்ததனை அருந்து
அதுவே சுகம் தரும் விருந்து...

அல்ஹம்துலில்லாஹ்

ALA ஜப்பார்
(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்)
காத்தான்குடி - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**மேலே உள்ள படத்தில் நீங்கள் காண்பது காத்தான்குடி-5 பத்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாயலின் பழைய, புதிய கட்டிடத் தோற்றமாகும்.**

**அகில இலங்கை "ஸுன்னத் வல் ஜமாஅத்" கொள்கைவாதிகளினதும், "தரீகாவாதி"களினதும் பிரதான தளமாக விளங்கும் பத்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாயலின் புதிய கட்டிடத்திற்கான வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.**

**லிப்ட் - மின்தூக்கி வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்ற இப்பள்ளிவாயலின் 70 சதவீத வேலைகள் நிறைவு பெற்றுள்ளன.**

**எஞ்சியுள்ள வேலைகளையும் முடித்து மிக விரைவில் திறப்பு விழா செய்வதற்கு ஸுன்னிகளினதும், தரீகாவாதிகளினதும் நிதியுதவிகளை எதிர்பார்க்கின்றோம்.**


தொடர்புகளுக்கு
பொருளாளர்
பத்ரிய்யஹ் ஜும்அஹ் பள்ளிவாயல்
BJM வீதி, காத்தான்குடி-5
065 22 45 625
077 91 85 192


பணம் அனுப்ப :
People's Bank - Kattankudy
Badhriyyah Jumah Mosque
AC : 065100120000937

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org